# எச்சரிக்கை

வெள்ளியங்காட்டான்

கவிதைத் தொகுதி 2ம் பாகம்

தியாகி அச்சகம்
325 காந்தி ரோடு காஞ்சீபுரம்

3—7—1950

காப்பிடப் பெற்றது] [விலை ரு. 1—0—0

உ

# அணிந்துரை

'வெள்ளியங்காட்டான்' அவர்களுடைய 'இனிய கவி வண்டு' என்ற முதல் கவிதைத் தொகுதி தமிழ் நாட்டில் நல்ல புகழ் பெற்றது. வரவேற்கப்பெற்றது. கவிதைகள் பாராட்டப் பெற்றன.

அன்றியும் இவரிடம் கவிதைச் சுடர் இருக்கிறது. இன்னும் அநேகம் முத்துக் கவிதைகள் எதிர்பார்க்கிறோம் என்றும் எழுதினார்கள்.

எதிர் பார்த்தபடியே அவர் கவிதைகளின் இரண்டாம் பாகம் இதோ வெளிவருகிறது. தமிழ் நாடு சுவைத்து ரசிப்பதாக.

இராம-சடகோபன்
ஆசிரியர், தியாகி
3—7—50

# பொருளடக்கம்


1. வாழ்த்து
2. வைகறை வனப்பு
3. நல்ல நாடு
4. சாதகம்
5. கவலைதனை நீக்கு
6. கண்டதும் கற்றதும்
7. இடமில்லை
8. வாழும் வழி
9. முயற்சி
10. உணவைப் பெருக்கு
11. வாடும் பயிர்
12. கத்தரிச் செடியின் கவலை
13. மாலை வேளை
14. இரவும், பிரிவும்
15. முகிலின் கண்ணீர்
16. உதயம்
17. பரிவுள்ள பையன்
18. காந்தி மகான்
19. எழுச்சி
20. வைகறைப் பறவைகள்
21. கீர்த்தி கிடைக்கும் வழி
22. புகழ்
23. பயமில்லை
24. காலுந் தேய்ந்ததே
25. கூண்டுக்கிளி
26. அறிக்கை
27. நான்
28. அவன்
29. எச்சரிக்கை
30. முழக்கம
31. கூடவரும் பொருள் இல்லை
32. பிரிவு
33. அறியாமை
34. காந்தி தரிசனம்
35. மனிதனுய் வாழ்க!
36. ஏமாற்றம்
37. வேட்கை
38. பிரம தரிசனம்
39. தமிழ்
40 மங்கையின் மகிழ்ச்சி
41. இனிமேலேனும் வேண்டாம்
42. சுதந்திர தினம்
43. உபதேசம்
44. வாழ்க நேரு!

# சமர்ப்பணம்

அம்புவியில் அறிஞரென உள்ளோ ரெல்லாம்
அதிசயிக்கும் அருங்குணங்க ளனைத்தும் பெற்றுக்
கம்பனுக்குச் சடையப்ப வள்ளல் போலும்
கபிலனுக்கு வேள்பாரி யெனவும் நல்கித்
தம்பியைப்போல் பணிவிடைகள் செய்தென் னெஞ்சைத்
தனக்கிடமாய்க் கொண்டிருக்கும் தகைமை வாய்ந்த
கெம்பனூர் லிங்கையா வுக்கின் னூலைக்
கிளர்ந்தெழுநல் லுவகையுடன் சமர்ப்பிக்கின்றேன்

**வெள்ளியங்காட்டான்.**

---

இந்தப் புத்தகம் அச்சிடப் பொருளுதவி செய்த கனவான்கள்:—சந்தேகவுண்டன்பாளையம் ரா. சுந்தரசாமிக் கவுண்டர் அவர்களுக்கும், ரா. கிருஷ்ணசாமிக் கவுண்டர் அவர்களுக்கும் எமது நன்றி உரியது.

# 1. வாழ்த்து

என்னை யாண்ட ருள்வாய்—அன்னாய்
என்னை யாண்ட ருள்வாய்
என்னை யீன்ற அன்னாய்—இனி நீ
என்னை யாண்ட ருள்வாய்.

உன்வ யிற்று தித்தேன்—உன்பால்
உண்டு டல்வ ளர்ந்தேன்
உன்தி ருப்ப ணிக்கே—என்றன்
உயிரை யர்ப்ப ணித்தேன்.

சின்னஞ் சிற்றெ றும்பு—யானை
செடி மரங்க ளெல்லாம்
மன்னி வாழ வென்றே—உன்பொன்
மடியி லேந்து கின்றாய்.

என்ன தென்று பேணப்—பலவாய்
இங்கி ருப்ப தெல்லாம்
உன்ன தென்ற வுண்மை—என்றோ
உணர்ந்து கொண்டு விட்டேன்.

நின்ன லத்தை நாடி—எனது
நெஞ்சி யங்கு மாயின்
என்ன ங்கள் யாவும்—உடனே
இணைந்து பூர்த்தி யாகும்.

அன்னை யன்னை யென்று—போற்றி
அருளை யேற்ப தன்றி
பின்னை யொன்று வேண்டேன்—சீவன்
பிரிந்து போகு மட்டும்.

செந்த மிழ்க்கு ளத்தின்—மலர்கள்
சேவ டிக்கண் சிந்தி
வந்த னங்கள் செய் து—உன்னை
வணங்கி வாழ்த்து கின்றேன்.

# 2. வைகறை வனப்பு

அழகிய வைகறையே—ஒளிசெய்
அழகிய வைகறையே
பழகிய பாவலரை—மிகமிகப்
பரவசம் பண்ணிடுவாய்.

காடுகள் கழனிகளில்—கம்புநெல்
கருகரு வென வளர்ந்தே
ஆடுகள் மாடுகளை—அருகினில்
அழைப்பது போலசையும்.

பருவதம் பருதியுடன்—இரவு
பண்ணிய பகைச் செயலை
உருகி யுரைப்பது போல்—அருவி
உருண்டுருண் டோசையிடும்.

நீல மலர் களையே—இருளாய்
நினைத்ததை நீக்கிடவே
காலை யிளம் பரிதி—விரியும்
கதிர்க்கரத் தால் துடைப்பான்.

பனிக்கரை களில் புகுந்து—பாவையர்
பம்பின பான்மையைப்போல்
குளக்கரை களில்தவளை—நீரில்
குதித்துளம் களித்திருக்கும்.

விசும்பிடை விளக்குகளாம்—மீன்கள்
விடிகையில் வெருண்டனவாய்
பசும்புல்லில் பதுங்கினபோல்—பாமரப்
பனித்துளி படிந்திருக்கும்.

பற்பல மலர்களிலே—தேனைப்
பருகிய மதுகரங்கள்
அற்புதப் பண்ணிசைக்கும்—செவியின்
அமுதிது தானெனவே.

கொத்தி யுனைக் கொல்ல—மீனே
. குருவியங் குளத்தெனவே
அத்தி மரத்தணிலார்—பரிந்து
அபாய அறிக்கையிடும்.

நீண்டகொம் பினில் குரங்கு—இனிது
நீங்கிய திரவெனவே
பூண்டபே ரன்புடனே—பெண்ணின்
புறமூது கினைத்தடவும்.

உய்வகை தனையுணர்ந்து—வாழும்
உயிர்களின் உவகையிலே
தெய்விக அன்புணர்ச்சி—பொங்கித்
தேக்கிடும் என்னகத்தே.

# 3. நல்ல நாடு

●

நான்பி றந்ததென் னாடு—உலகில்
நனியும் நல்ல நாடு
தேன்பி றந்தசுவைத் தமிழால்—என்றும்
சிறப்பு மிக்க நாடு.

உறுதி யானவுட லெழிலும்—அன்பால்
உருகி நின்ற வுளமும்
இறுதி யானமனத் தெளிவோ—டாண்பெண்
இணைந்து வாழும் நாடு.

உரிய தெனுந்தமது தொழிலே—கலையாய்
உவந்து பேணு கின்ற
அரிய பெரிய செயல் வல்லோர்—பலரும்
அமைந்து வாழும் நாடு.

தமது வாழ்க்கைநிலை தாமே—உயர்த்தித்
தகுதி செய்து கொண்டு
அமைதி யானநிலை தனிலே—முறையாய்
அறம்வ ளர்க்கும் நாடு.

இதய மென்ற நறுஞ் சுனையில்—ஓயா
தினிய நீர்சு ரந்து
புதிய பொருள்பல வுண்டாக்கி—எங்கும்
புகழ்ந்து போற்றும் நாடு.

புனித மானநறு மலர்கள்—முகர்வோர்
புலன்க ளிக்கு மாறு
மனதின் மாட்சிமையி னாலே—யார்க்கும்
மகிழ்ச்சி யூட்டும் நாடு.

உலர்ந்து திர்ந்தசரு கே போல்—உயிர்போய்
உடல்வி ழுந்த பின்னும்
மலர்ந்த நெஞ்சுபடு மண்ணும்—மட்கி
மணம்ப ரப்பு நாடு.

# 4. சாதகம்

○

நமையு யர்த்திடு வோம்தி னந்தினம்
நமையு யர்த்திடுவோம்
தமையு யர்த்துவ துந்த குந்ததோர்
தரும மென்பதினல்,

கண் ணுங் காதுங் கையுங் காலுங்
கருத்து ரைக்கவாய்
மண்ணில் மனிதர்க் கமைந்தவாறு
மற்றொன் றுக்குண்டோ?

குருவி யனைத்துங் கூடிக் குடித்துக்
குறைந்த தேயென
அருவி யழுத வாறு மனிதர்
அங்க லாய்ப்பரோ?

பாழ் நி னைவுடன் தீச்செயல்களைப்
பரிக ரித்ததுமே
வாழ்வி ருளற நீள றச்சுடர்
வழிவ குத்திடுமே,

அறிவி ருப்பதின் பயன் அனைத்தையும்
அலசி யறிவதே
திறமி ருப்பதின் பயன் அனைத்தையும்
திருந்தச் செய்வதே.

நிர்வி சார நிலையில் நமது
நினைவு சொல்செயல்
சர்வ மொன்று போன்றி யங்கும்
சக்தி சாரவே.

அமர ராக லாமி தன்றெனில்
அரக்க ராகலாம்
தமது செயல்க ளேயெ தற்கும்
தகுந்த சாதகம் !

# 5. கவலைதனை நீக்கு

மடங்கல் தனைப்போலே—விடிய
மலர்ந்த மலர்போலே
உடலை உரமாக்கு—உனது
உளத்தை விரிவாக்கு.

அடுத்த பொழில்போலே—மலரில்
அவிழ்ந்த மணம்போலே
இடத்தை எழிலாக்கு—உனது
இயல்பை வெளியாக்கு.

கடல்வெண் ணுரைபோலே—உருகிக்
கமழும் நெய்போலே
உடையை ஒளியாக்கு—உனது
உணவைச் சுவையாக்கு.

புடத்தின் பொன்போலே—உண்மைப்
புலவன் கவிபோலே
நடத்தை நலமாக்கு—உனது
நட்பை நிலையாக்கு.

நடுகல் நிலைபோலே—மகவின்
நகைத்த முகம்போலே
கடமை கருத்தாக்கு—உனது
கலையைச் செயலாக்கு.

சடையின் நதிபோலே—பனிங்காய்ச்
சமைந்த நீர்போலே
உடமை பொதுவாக்கு—உனது
உரையைத் தெளிவாக்கு.

படிப்பின் பயன்போலே—பரிதி
பகைத்த பனிபோலே
கடவுள் அருள்நோக்கு—உனது
கவலை தனை நீக்கு.

# 6. கண்டதும், கற்றதும்.

காலைக் கதிரவன் தோன்றக்—கொடிய
காரிருள் தூரங் கழிவதைக் கண்டான்
சாலத் தெளிந்த அறிவால்—அவன்
சஞ்சல நெஞ்சிருள் நீக்குதல் கற்றான்.

கூவுங் குயில் குரல் கேட்டு—இந்தக்
குவலய மின்புறுங் கொள்கையைக் கண்டான்
ஆவ லுடன் இசை பாடி—அவன்
யாரையும் அன்பர்க ளாக்கிடக் கற்றான்.

ஓய்வொழி வென்பதில் லாமல்—என்றும்
ஊன்றியங்கும் நல் வாயுவைக் கண்டான்
மாய்வுறு மட்டுந் தொழிலை—அவன்
மகிழ்வுடன் நன்கு புரிந்திடக் கற்றான்.

நீல மலையும் நிமிர்ந்து—என்ன
நேரினும் நிலைநலங் காமையைக் கண்டான்
கால மனைத்தும் மலைபோல்—அவன்
கலக்கமில் லாமல் நிலைக்கவும் கற்றான்.

பரந்த கடல்அலைக் கையால்—தன்னைப்
பார்ப்பவர் தமைவர வேற்பதைக் கண்டான்
விரிந்த மனத்துடன் நாளும்—அவன்
வீட்டில் விருந்தினர் கூட்டவும் கற்றான்.

வண்ணப் பிறைமதி தோன்றி—நிலவை
வாரி வழங்கும் வயணத்தைக் கண்டான்.
தண்ணருள் மிக்கவ னாகி—அவன்
தருமம் தவறாமல் தான்செய்யக் கற்றான்.

பகலென்ன இரவென்ன மாறிக்—காலம்
பசுமையை பயிராக்கிப் பறிப்பதைக் கண்டான்
சுக துக்க மாகவே மாறி—அவன்
செல்லாமல் செல்கின்ற சூக்குமம் கற்றான்.

# 7. இடமில்லை

●

எல்லை யற்ற அழகால்—கமழும்
இனிய நறும ணத்தால்
மல்லி கைமலர்க்கும்—எனது
மனமி டங்கொ டுக்கும்.

கள்ள மற்ற கண்கள்—அழகு
கலந்தி ருக்கும் மேனிப்
புள்ளி மான்க ளுக்கும்—எனது
புலனி டங்கொ டுக்கும்.

அயற்பு றத்தி ருந்து—உருக
அமுதம் போன்றி னிக்கும்
குயிலின் குரலி னுக்கும்—நெஞ்சு
குளிர்ந்தி டங்கொ டுக்கும்.

கொஞ்சு கின்ற மழலை—பவளம்
கொண்டு செய்த செவ்வாய்
விஞ்சு மெழில் மகற்கும்—இதயம்
விரிந்தி டங்கொ டுக்கும்.

துன்ப இருள்தொ லைத்து—அறிவாய்த்
தூய ஒளிப ரப்பும்
இன்ப மான தமிழுக்—கிதயம்
இசைந்தி டங்கொ டுக்கும்.

உயிர்க ளுக்கு ளுயிராய்—அகண்ட
உலகெ லாம்நி றைந்த
உயர்ந்த தெய்வி கத்துக்—குளந்தான்
உயர்ந்தி டங்கொ டுக்கும்.

பழிபொய் அச்சம் கோபம்—சூதாம்
பாவம் பெற்றெ டுக்கும்
அழிவு தேடுங் குணங்காள்—உமக்கென்
அகமி டங்கொ டாது!

# 8. வாழும் வழி

ஒவ்வொரு நாளாய் ஒவ்வொரு நாளாய்
ஓடுது வாழ் நாட்கள்—இதில்
எவ்விதம் வாழுவ தென்பதை நானின்
றெண்ணி யியம்பிடுவேன்.

இருந்திடும் நாள்வரை இன்பமோ துன்பமோ
எது வரினும் வருக!—ஆனால்
பரிந்திடும் நற்குணம் படைத்தவ னாய்ப்பலர்
பயன்பட வாழ்ந்திடு வேன்.

நண்பனும் பகைவனு மென்பதில் லாமலே
நன்மைகள் செய்திடுவேன்—நல்ல
பண்புடன் மக்களுக் கன்பு படிந்திடப்
பாங்குடன் பயிற்றிடுவேன்.

பசியென ஒருமுறை பகருமுன் பரிவுடன்
படைத்திடும் தாயாவேன்—சென்று
புசியெனப் புகன்றிடும் தந்தையைப் போன்று நற்
புரவல னேயாவேன்.

அடிமையு மன்று நான் ஆண்டையு மன்றுபின்
யாரெவ ராயிடினும்—உள்ள
உடைமையும் உரிமையும் உழைப்பவர்க் கென்பதை
யுணர்ந்தினி யொழுகிடுவேன்.

நெருப்பெனப் பற்றி யெரித்திடும் வெய்யிலில்
நிழலென மாறிடுவேன்—இமயப்
பொருப்பினில் நின்று நடுங்கிடு குளிரெனில்
பொதிநெருப் பாயிடுவேன்,

ஒவ்வொரு நாளாய் ஒவ்வொரு நாளாய்
ஓடிடும் வாழ்நாளில்—இனி
இவ்வித மாக வாழ்வதி னின்றொரு
இடமியுந் தவறேனே!

# 9. முயற்சி

•

முயலுக என்றும் முயலுக என்றும் முயலுக—மேன்
மேலும் முயலுகவே
செயலெனுஞ் சாகரம் சிந்தனை மத்தில் தெரிக்கவே—அமுதச்
செல்வம் திரண்டெழவே. (முய)

காரிருள் சூழ்ந்துதன் கண்ணைச் செயலற்ற தாக்கினும் துளி
கவலையில் லாதவனாய்
பேருக் கிருக்கிற ஞானச் சிறுதடி யூன்றியே—இருளன்
பெயர முயல்வதுபோல். (முய)

காட்டி விரைமிகத் தேடிப் பொழுது கழிந்ததும்—தனது
கண்ணின் நனிசிறந்த
கூட்டி லிருக்குந்தன் குஞ்சினைக் காணக் கருதிய—தாய்க்
குருவி முயல்வதுபோல். (முய)

நடக்கும் வழியில் இலந்தை நெருஞ்சிமுள் ளாயிரம்—
நட்டுவைத் தாரெனினும் /பகைவர்
அடக்கமும் அன்பும் உடையவர் அவ்வழி யாகவே—வரின்
அகற்ற முயல்வதுபோல். (முய)

காலைக் கதிரவன் தோன்றி யதுமுதலாகவே—மாலைக்
கங்குல் வரும் வரையும்
சோலை மலர்களி லுள்ள மதுவினைச் சேர்க்கவே—ஈக்கள்
சொக்கி முயல்வதுபோல் (முய)

உற்ற சுகங்க ளனைத்தும் உதறி எறிந்துதன்—உள்ளத்
துண்மை தனைப்பதித்தே
கற்றவர் நெஞ்சங் களிக்கக் கவிதை புனையவே—கவிஞன்
கருதி முயல்வதுபோல் (முய)

எல்லையில் லாதபே ரின்ப வெளியி லிருப்பவன்—உல
கெங்கும் நிறைந்தவன் பால்
நல்லறி வென்னும் சிறகைவிரித்துப் பறக்கவே-தொண்டனை
நாளும் முயல்வது போல். (முய)

# 10. உணவைப் பெருக்கு

●

உணவுண் டாக்கிட வேண்டு மின்றுநம்
உயிரை யேகொடுத் தாயினும்
பணமுண் டாக்கிடக் கூடு மாயினும்
பசித ணித்திட லாகுமோ?

நெற்றி நீரெழில் நித்தி லம்மென
நீணி லத்தினில் சொட்டவே
பெற்ற சுதந்திர நாட்டில் மக்களைப்
பேண முயலுவம் யாவரும்.

இன்ப துன்பமெ லாமிவ் வுலகினி
லியற்கை யென்பதி னால் நனி
அன்பு டன்உழைப் போமிங் கனைவரு
மாவ லாய்விரைந் தேயினி.

குஞ்சைக் காத்திட வேண்டி ஒருசிறு
குருவி பற்பல காதம் போம்
பிஞ்சைப் பேணுதற் காகச் செடி கொடி
பெரிதும் முயலும்தம் வேர்களால்.

பசியின் கொடுமையி னால்கு ழந்தைகள்
பரித வித்திடும் வேளையில்
புசிக்கத் தருவதற் கின்றிக் கூடையைப்
போட்டு மூடிடக் கூடுமோ?

உடலி லேவலு வுள்ள மனிதர்க
ளோய்ந்தி ருந்திடு வாரெனில்
கடவு ளேனென வினவி னால்சொல்லக்
கார ணங்களுண் டாகுமோ?

செய்யும் வேலைகள் சரிவ ரத்தினம்
செய்து கொண்டிருப் போமெனில்
தெய்வம் விடும்வழி தனைவி டட்டும்த்
தேசமெங்குமுள் ளோர்களே!

# 11. வாடும் பயிர்

●

உலகெனும் தாய் வயிற்றில்—பயிராய்
உலர்வதற் கோபிறந்தேன்
பலபல பல்வாகி—வானில்
பரவிடும் கருமுகிலே

பாற்றினைக் கதிர்தருவேன்—பார்ப்பே
பதரா திருவென்றே
சாற்றிய கிளிமொழியுன்—காதில்
சற்றுமுன் புகவிலையோ?

விதியென அழுங்கன்றிற்—கென்னை
விருப்புடன் பசுகாட்டி
புதுத் தினைப் புல்புசிப்பாய்—கொஞ்சம்
பொறுத்தெனப் புகல்வதைப்பார்

பொன்னிறத் தினைக் குத்தி—இடித்துப்
புதுத்தேன் தனில்பிசைந்து
அன்னை யெமக்களிப்பாள்—எனுஞ்சொல்
அருகினில் கேட்குதுகாண்

குமரி மகிழ்ந்தன்று—கொடிக்கோர்
கொழுகொம் புதவுபுனம்
எமர்களிப் புறவிளைந்து—வாழ்க
என்றசொல் பொய்ப்பதுவோ?

உயிர்களுக் குதவுவதே—மிகமிக
உயர்தர அறமெனவே
மயலற மறையாய்ந்தோர்—திருவாய்
மலர்ந்ததை மறந்தனையோ?

வாழவும் வாழ்வேன்நான்—பிறர்க்கு
வாழ்வளிக் கவும்வல்லேன்
வாழுவ தறியார்போல்—மழையாய்
வாரா தொழிவாயோ!

# 12. கத்திரிச்செடியின் கவலை

கத்திரிக் காய்ச்செடி யென்றெனைச்—சொல்வர்
காணுந் தமிழரெல்லாம்.
சத்து மிருந்த உணவெனக்—காயைச்
சமைத்துப் புசித்திடுவார்

காப்பவர் தங்களைக் காக்கவே—எனைக்
கடவுள் படைத்ததினால்
பூப்பதுங் காய்ப்பது மாகிய—தொழிலில்
பொழுதைக் கழித்திடுவேன்

காற்று வெளிச்ச மிருந்தநல்—லிடத்தில்
கருகரு வெனவளர்ந்து
நாற்றுப் பருவ மதனிலே—மிகவும்
நன்றாக வேயிருந்தேன்

சின்னஞ் சிறிய உருவமாய்—எழில்
சிறிதுமில் லாதது மாய்
இன்னல் படும்படி யாகவே—என்னை
இந்த இடத்தில் நட்டான்

அறுகுபுல் பூண்டெனைச் சுற்றிலும்—முளைத்து
அடர்ந்து வளர்வதினால்
சிறையில் அடைத்தது போலவே—இன்று
சீரழி வுற்றிடுவேன்

கிழத்தனம் வந்தது போலவே—யாரும்
கேள்வி முறையுமின்றி
பழுத்துதிர் கின்ற இலைகளாய்ப்—பாரில்
பயனற்று வாடுகிறேன்

தாங்கவொண் ணாதநோய் வாயிலே—பட்டுத்
தவித்து மெலிவதனால்
ஓங்கவொண் ணாத நிலையிலே—இன்று
உள்ளங் குமுறுகிறேன்

கண்டுங் காணுதவன் போலவே—துளி
கருணையில் லாதவனுய்
உண்டது போதுமென் றெண்ணியே—உழவன்
உறங்கத் தொடங்கி விட்டான்

தக்கபடி பயிர் பண்ணிஞல்—காய்த்துத்
தருந்த விதம் தினமும்
மக்கள் பசியைத் தவிர்ப்பதில்—அதிக
மகிழ்ச்சி யடைந்திடுவேன்

புத்துயி ரெய்தியென் வாழ்க்கையில்—இந்தப்
பூமியி லின்புறவே
கத்திரிக் காய்ச்செடி யாயினும்—இன்று
கடவுளை வேண்டுகிறேன்.

# 13. மாலை வேளை

●

எழில்மி குந்த மாலை வேளை
யெனக்கி ரங்கி வருகுது
இதயம் கடலி னலைகள் போல
இன்பம் பொங்கிப் பெருகுது.

உழவுத் தொழிலைக் காட்டி லும்மு
யிர்ந்த தொன்றுண் டோவெனும்
உள்ளங் குளிரப் பண்ணுங் குழலி
ஞேசை கற்கண் டே யெனும்

வழிமு ழுவதும் நரியும் புலியும்
வருத்து கின்ற மலையிலே
வாழ்க்கைத் துணைவர் மாட்டை மேய்த்து
வந்து சேரும் நிலையிலே

பொழுது முழுதும் புழுதிக் காட்டில்
புல்லைத் தேடுங் கன்றுகள்
பொங்கும் அன்புத் தாயைக் கண்டு
புதுமை இன்ப மொன்றவே

பழுதி லாது வரகம் பயிரில்
பாழுங் களையைக் களையவே
பார்த்தெ னைச்ச லித்த மக்கள்
பரவ சித்து வளையவே

முழுது ணர்ந்த ஞானி காந்தி
முகம லர்ச்சி போலவே
மோக னத்தின் சிவ ணும்முச்
சந்தி வருக சாலவே

தொழுது வாழ்த்த வேண்டும் சென்று
தூய்மை யாக்கி வீட்டையே
தொடர்ந்து தெய்வம் காக்க வென்று
தூப தீபங் காட்டியே.

# 14. இரவும், பிரிவும்

முன்பி ருந்ததைக் காட்டிலும்—காதல்
மூண்ட நிலைதனிலே
அன்பன் வரவினை யன்றவள்—மிகவும்
ஆவலாய்ப் பார்த்திடுவாள்

உறங்க லாமெனக் கண்களை—மூடி
உறங்க முயன்றிடினும்
மறந்தி ருந்த நினைவுதான்—தோன்றி
மனதை மயக்கிடுதே !

தூய மல்லிகைப் பூக்களும்—அந்தோ
துன்பம் புரிகிறதே
பாயும் தலையணை யாவுமே—அனல்
பற்றி யெரிகிறதே

கண்ணை மூட இமைகளை—வைத்த
கடவு ளெக் காரணத்தால்
எண்ணி யேங்கும் மனத்தினை—மூட
எதுவு மில்லாது செய்தான்

நாண மாகிய கட்டினுள்—நின்று
நழுவிய தன்மனதைக்
காண வேண்டு மினியெனின்—விடியக்
காத்திட வேண்டியதே !

கரிநெ ருப்பி னிடையிலே—சிவக்கக்
காய்ந்தசெம் பொன்னெனவே
இரவி தோன்றுதற் கின்னமும்—ஊழி
எத்தனை தான்செலுமோ !

பருவ காலம் பொருந்தவே—நெல்லில்
பசுமை காணுமெனில்
உரிய வைம்புல உணர்வினோர்—இதை
ஒறுத்திடக் கூடுவதோ !

# 15. முகிலின் கண்ணீர்

●

அச்ச மற்றவனாய்த்—தவழும்
அரச குமரனைப் போல்
உச்சி வான்தனிலே—வெண்மதி
ஊர்ந்து வருகையிலே

சின்னஞ் சிறுமுகிலாய்—வானில்
சிதறிக் கிடந்தவைதான்
கன்னங் கருகரெனத்—திரண்டு
கறுவி எதிர்ந்திடவும்,

கண்ணன் திருவொளியில்—கொஞ்சம்
கவர்ந்து கலந்து கொண்டு
விண்ணி லெனை யெதிர்த்து—வீணாய்
வெறுப்பை விளைவிப்பாய்

பொன்னென் கதிர்முனையுன்—கண்ணைப்
பொட்டை யாக்கிவிடும்
என்னை யெதிர்க்காதே—விலகி
எட்ட நடவெனவே

அடிவ யிற்றினிலே—கண்கள்
அமைந்தி ருக்கிறது
பொடிய னே போடா—சும்மா
பூச்சி காட்டாதே!

வயிற்றில் கண்களையும்—முதுகில்
வாயும் வைத்திருந்தால்
இயற்றும் தொழில் போர்தான்—என்று
ஏள னம் செயவே

நாக்க றுந்ததுபோல்—முகிலும்
நாண மடைந்ததுவாய்
ஏக்கங் கொண்டழவே—கண்ணீர்
இறங்கும் தாரைகளாய்!

# 16. உதயம்

●

கொக்கரக் கோவெனக் கூவின—ஊரில்
கோழிக் குலமனைத்தும்
மிக்க மகிழ்ச்சி பெருகுக—இந்த
மேதினி மீதெனவே.

மெய்மறந் துறங்கிடும் யாவரும்—மெது
வாக உடலசைத்து
கைகளு தறி நிமிர்த்ததும்—தத்தம்
கண்கள் மலர்ந்தனரே.

இரவிற் பொழிந்த மழையினால்—வறண்
டிருந்த அருவி கரை
பெருகிப் பொலிவுடன் இன்னிசை—பாடிப்
பெருமகிழ் வளித்தனவே

மையிருள் கௌவிய மாநிலம்—தனை
மலரும் கதிரவனும்
பையப் பசும்பொன் கரங்களால்—பற்றிப்
பக்குவ மாயணைந்தான்

அலைகடல் நீரை முழுவதும்—முகில்
அள்ளி யிறைத்துவிட்டு
மலைகளி னூடு தவழ்வது—அஞ்சி
மறைவது போலு மம்மா!

சோம்பல் வறுமை பசிப்பிணிக்—கள்வர்
சூறை யிடும்மனைகள்
பூம்புனல் பொய்கை மலர்கள்போல்—இன்று
பொலியத் தொடங்கினவே

கத்தியை ஏந்திய வீரரும்—வீணில்
காலங் கழிப்பவரும்
சித்தம் மகிழ்ந்து கலப்பைகள்—தூக்கிச்
செல்ல முயன்றிடுவார்

தோளி லெடுத்த தினவுதான்—தீரத்
தொழுவ மதிற் புகுந்து
காளைகள் தன்னைப் பிடித்ததும்—ஏரில்
கட்டி உழுதிடுவார்

விராலி முளைத்த நிலமெல்லாம்—உழுது
விதைக்க முனைந்திடுவார்
வரால்கள் பிரள வயல்களில்—உயர
வரப்பைத் திருத்திடுவார்

பஞ்சம் தொலைந்தது நாட்டிலே—நமது
பசிப்பிணி போச்சுதெனக்
கொஞ்சி மகிழ்ந்திட வீட்டிலே—பெண்கள்
குழந்தைகள் தம்முடனே.

# 17. பரிவுள்ள பையன்

●

ஒருதினம்; காலை நேரம்;
ஒளிக்கதி ருதித்துச் சும்மா
இரண்டொரு நிமிடம் கூட
இருக்காது மரங்க ளின்மேல்
குருவிகள் கூடி யின்பக்
குரலினில் பண்ணி சைக்கச்
சரியெனச் சொல்லி நானும்
சட்டென எழுந்தி ருந்தேன்

சிந்தனை துளியு மின்றித்
தெருப்பக்கம் கால்கள் செல்ல
விந்தையாய்ச் சிறுவர் கூடி
விளையாடக் கண்டு நின்றேன்
முந்திய இரவு பெய்த
மழையினால் நனைந்த பூமி
அந்தமில் உவகை மற்றங்
கவர்களுக் களித்த தம்மா!

அதிலொரு சிறுவன் மெத்த
அமைதியா யிருந்தான் குந்தி
புதியதாய்ப் பொன்னால் காண்போர்
புலன்மயங் கிடவே செய்த
அதிசயச் சிலையி தென்றே
அகமிக மகிழ்ந்தேன் அங்கே
எதனையோ கூர்ந்து பார்த்தான்
என்னவென் றெண்ணி னேன்நான்

பாதையின் மறுபு றத்தில்
பறப்பம்பாய் வைத்து நீள
யாதொன்று மூட்டு காதே
அடைத்திருந் தார்கள். பாயின்
மீதினில் காக்கைக் கும்பல்
மெதுவாக எழும்பும் குந்தும்
சூதுடன் கூர்ந்து பார்க்கும்
சுருக்கவே பறக்கும் குந்தும்

அங்கொரு சிறிய புற்று
அதிலுள்ள ஈசல் யாவும்
இங்கேயே இதுகா றும்நாம்
இருந்தென்ன பலனைக் கண்டோம்
எங்கேனும் சற்று நேரம்
இன்பமா யுலவிப் பின்னர்
தங்கிட வரலா மென்றே
தரணிமேல் கிளம்பா நிற்கும்

உலகினில் நடப்ப தொன்றும்
உணராத ஈசல் கூட்டம்
பலதையும் காண எண்ணிப்
பறக்கையில் பட்டாம் பூச்சி
சில சில காட்சி தம்மைச்
செவ்வையாய் விளக்கிக் காட்டும்
கல கல வெனந கைத்துக்
காக்கைகள் பறக்கும் குந்தும்

பறந்திடும் பட்டாம் பூச்சி
பார்க்குமுன் காக்கை கள்தான்
பறந்திடும் ஈசல் தமமைப்
பழம் போன்று கௌவிக் கொண்டு
பறந்திடும் விழுங்கி விட்டுப்
பறப்பம்பாய் முகட்டிற் குந்தும்
பறந்திடும் பின்னு மொன்றைப்
பற்றிடும் விழுங்கும் குந்தும்

அச்சிறு சீவ ராசி
அவலமா யழியக் கண்ட
பச்சிளம் பாலன் நெஞ்சம்
பதரிற்று; பரிவால வாய்விட்
டச்சோஆ ஆஹா வென்றே
அதட்டியே ஆர்ப்பரித்தான்
நொச்சையாம் காக்கைக் கும்பல்
குவலயத் தொழிக வென்றே!

# 18. காந்திமகான்

வீர ரென்பவர் யாவரி லும்பெரும்
வீரம் படைத்தவன்யார்?
பாரில் பாமரர் படுந்துயர் நீங்கப்
பரிந்தவர்க் கேஉழைத்தோன்!

இன்பந் துய்த்தவர் யாவரி லும்பே
ரின்பம் துய்த்தவன்யார்?
அன்பு கூர்ந்தரு ளாவல் சுரந்திட
அறவழி யில்நடந்தோன்!

தியாகி யென்பவர் யாவரி லும்பெருந்
தியாகியாய் வாழ்ந்தவன்யார்?
நியாய நிலைநின்று நியாயம் நிலைநாட்ட
நாட்களை அர்ப்பணித்தோன்!

பக்தி யுடையவர் யாவரி லும்பெரும்
பக்தி யுடையவன் யார்?
சக்தி முழுவதும் சகத்தின் நன்மைக்குச்
சலியாது தானளித்தோன்!

அறிவு படைத்தவர் யாவரி லும்பே
ரறிவு படைத்தவன்யார்?
துறவு நிலையிலே தூய சிந்தையை வைத்துத்
தூய்மை பெருக்கிடுவோன்!

பாக்கியம் செய்த யாவரி லும்பெரும்
பாக்கியம் செய்தவன் யார்?
ஆக்கினை கட்குத் தலைவணங் காதுநல்
லறிவின் படி நடந்தோன்!

இத்தனைக் குணம் மொத்தம் தானேயாகி
இந்நிலத் திருந்தவன்யார்?
சத்தி யத்தைத்தன் சித்தத் திருத்திய
சாந்தநம் காந்திமகான்

# 19. எழுச்சி

பங்குனி மாதம்—பகல்
பத்து மணிக்கு
மங்கள கீதம்—மலர்
வண்டுகள் பாட
இங்கித மாக—மனதுக்
கின்பம் பயக்கும்
துங்க பத்திரை—நதித்
துறையி லிருந்தேன்

சிங்கக் குருளை—யென்று
செப்பிட லானோன்
மங்கும் இருளில்—தோன்றும்
மதியத்தைப் போலே
மூங்கி யமிழ்ந்ததும்—தொழிலில்
முனைந்தவ னாகி
அங்கன் னதியில்—யாதோ
ஆய்ந்திட லானான்.

சங்கதி யென்ன?—என்று
சாடையிற் கேட்டேன்
அங்கவன் சொன்னான்—ஐய
அவனியின் மீது
எங்கு கண்டாலும்—சுதந்திர
எழுச்சி எழுந்து
பொங்கும் பொழுது—அடக்கப்
புறப்படு கின்றார்.

இங்கதை நானும்—ஆய
எண்ணின னாகி
எங்களிற் கூறை—மீதி
லேறிப் படர்ந்து
தொங்கும் சுரைக்காய்—முற்றித்
தொட்டும் உலர
இங்கதை நீரில்—அமிழ்த்தி
இருந்திடச் செய்தேன்.

தங்கிநில் லாது—மேலே
தாவுது காணீர்
இங்ஙன மாக—மக்கள்
எங்ஙனம் தாழ்வார்
எங்கள் உரிமை—நாங்கள்
எடுத்துக்கொள் வோமே
சங்கரி காளி—வெல்க
சத்திய மென்றான்.

அங்கந்த வேளை—நன்னீ
ராடும் நிமித்தம்
தங்கமே போலும்—மேனி
தளதளப் போடு
மங்கை ஒருத்தி—மனதில்
மகிழ்ச்சி குலாவ
எங்கள் துறைக்கு—வரவே
எட்ட நடந்தோம்.

# 20. வைகறைப் பறவைகள்

○

சாலை யருகினிலே—மனச்
சஞ்சலந் தீர்க்கு மெழில்
சோலையு றுண்டதிலே—உண்டு
சுந்தரப் பூங்குயிலும்

புத்தம் புதியதொரு—விடியல்
புதுமை நுகர்ந்துகொண்டே
சித்தம் மகிழ்ந்திருக்கும்—மயில்
சிறுகிளை மீதினிலே.

மாணிக்கக் கண்படைத்த—குயிலே!
மலர்மணக் காற்றிடையே
வீணைக்கு வெட்கம்தரும்—உன்குரல்
விரவின் நனி இனிக்கும்.

என்று இவ்வுரைக்க—நாரை
இசை விருந் தென்றிருக்க
நன்றெனப் பூங்குயிலும்—மெல்ல
நகைத்தவை மெய் மறக்க

இன்பக் கதிரவனே—வருக
இதயம் களிப்புறவே
நின்பெறும் நல்லொளியால்—இருள்
நீங்கயிந் நீணி லத்தே

கண்பெற்ற நற்பயனாய்—எமக்குக்
காட்சி யளித்திடவே
விண்பெற்ற மாமணியே—வருக
விரைந்தென் றிசைக்கையிலே

தேக்கு மரத்தினிலே—மூக்கைத்
திட்டித் திடுக்கிடத்தான்
காக்கைகள் கல்லெனவே—இரைந்து
கரைந்தது விடிந்ததென்றே.

# 21. கீர்த்தி கிடைக்கும் வழி

●

ஆர்த்தெழுமிப் பெருங்கடல்சூ ழவனி மீதில்
அன்றிருந்த பேரறிஞர் ஆய்ந்து முத்தாய்க்
கோர்த்தெழுதி வைத்தபல நூல்க ளெல்லாம்
கூறுவதொன் றென்றுணர்ந் தென்ன வென்றேன்
கீர்த்தியென உரைத்திடுவார் மனிதர் கையில்
கிடைத்தால் போதும்பிறவி தீர்ந்த தென்றான்
நேர்த்தியென நானதனை நம்பி னேனாய்
நெடுநாட்கள் தேடினேன் தேடி னேனே

முப்போதும் பால்பழமா யுண்டு பார்த்தேன்
மூக்குக்குக் கண்ணாடி போட்டும் பார்த்தேன்
தப்பாமல் நாள்தோறும் காரி லேறித்
தார்ரோடும் தூளெழும்ப ஓட்டிப் பார்த்தேன்
சுப்பையன் கடைதனிலும் கேட்டுப் பார்த்தேன்
சுக்குண்டு மிளகுண்டென் றவனுஞ் சொன்னான்
அப்பப்பா அக்கீர்த்தி எனக்குக் கிட்ட
ஆண்டவனுக் கபிசேகங் கூடச் செய்தேன்.

அழகான உடையெல்லாம் தரித்துப் பார்த்தேன்
அமரிக்கன் கிராப்புந்தான் வைத்துப் பார்த்தேன்.
நிழலாக இருந்தாலும் குடைம டக்கேன்
நீரினிலும் செருப்புக்கா லுடன் நடந்தேன்
பழகாத நடைநொடிபா வனைக ளெல்லாம்
பழகியதை வழக்கத்தில் கொண்டு வந்தேன்
விழலுக்கே இறைத்தநீர் போல யாவும்
வீணாச்சு பணம்மெத்த விரய மாச்சு.

தேடாத இடங்களெல்லாம் தேடித் தேடித்
தேகமெலாம் வியர் வொழுக நாளும் நாளும்
ஆடாத ஆட்டங்கள் பலவு மாடி
அலுத்தவனாய் ஓரிடத்தி லுட்கார்ந் தேனே
காடாக அந்தயிட மிருந்த தங்கே
கருங்குயி லொன்றென்னை நோக்கிக் கனிவுகொண்டு
ஆடவன்நீ யாவலைக் கீர்த்தி தன்னை
அடையும் வழி உரைத்திடுவே னெனவேபாடும்

எண்ணிடுவோம் எண்ணிடுவோம்தமிழர் நாமே
எண்ணறியாப் பெருவலிமை பெற்றோர் நாமே
கண்ணதிலே காண்பதனை உடனே கற்றுக்
கல்லாதா ரெல்லார்க்கும் சொல்வோம் நாமே
திண்ணியர்க ளாயிருந்திவ் வுலகிற் காணும்
தீமைகள்யா வும்மாயச் செய்வோம் நாமே
புண்ணியமாம் வழிகளிலே பொருளைத் தேடிப்
புசித்திடுவோம் சமமாய்ப்பங் கிட்டு நாமே

சண்டைகளோ சச்சரவோ நேரா வண்ணம்
சகத்தின்மேல் அன்பறத்தை வளர்ப்போம் நாமே
அண்டினவர் யாவரையும் மக்க ளாக
அறவணைத்துக் கொண்டுமனங் களிப்போம் நாமே
பண்டைய நம் பெருமைகளைக் கீதமாகப்
பசுந்தமிழால் பக்தியுடன் இசைப்போம் நாமே
கண்டவர்கள் களிகூற உண்மை நம்மைக்
கலந்திடுமேல் கீர்த்திதனை காண்போம் நாமே

கூடுகட்டத் தெரியாத குயிலென் றாலும்
கூறினதில் அவ்வளவும் உண்மை யுண்டு
காடுவிட்டு வருவதற்கும் மனமில் லாமல்
கவனமெலாம் குயிற்குரலில் கலந்தி ருந்தேன்
பாடுபட்டால் பயனுண் டென் றெனது நெஞ்சம்
பரவசமா யுணர்ந்து பார்த்தேன்: அந்தோ
கேடுகெட்ட கிழநாரை யொன்று வந்து
கீதம்பா டுங்குயிலை விரட்டிற் றம்மா!

# 22. புகழ்

புகழெனும்மலைச் சிகரம் பொதுவெளில்
போகப் புறப்படுவேன்—என்
சுகமிழப்பது மன்றிப் பலபல
தொல்லைகள் சூழ்ந்திடினும். (புக)

அரிய பொன்மடி மீதி லமர்ந்திட
அன்னை அழைக்கையிலே—வெறுந்
தரையில் சுற்றித் தவழ்ந்து சலித்துப்பின்
தாவுங் குழந்தையைப்போல் (புக)

தூக்கம் சோம்பல் பசிப் பிணி யாதி
தொலைக்கும் மருந்துகளாம்—நல்ல
ஊக்கம் உண்மை உணவுக ளாதி
உறுதுணை யா கிடவே (புக)

இருள்க விழ்ந்திடும் வேளை அறிவெனும்
இன்பப் பிறை ஒளிரும்—அங்கு
அருளி லார்செயல் போல்கதிர் காய்கையில்
அன்பு நிழல் வளரும், (புக)

பற்றில் லாதநல் லுள்ளம் படைத்தவர்
பாத மலர்ச்சுவட்டில்— பெரும்
வெற்றி யென்ற எழுத்துகள் பொன்னால்
விளங்கப் பதித்து வைத்தார் (புக)

நல்ல செயல்களில் வல்லவர் யாவர்க்கும்
நல்வர வென்றெவரோ— அங்கு
சொல்லும் நல்லுரை யென்செவிக் கெட்டுது
சுபத்துக் கறிகுறியாய் (புக)

சீவ னாகிய தேவன் மனமெனும்
தேரில் அமர்ந்தவனாய்ச்—சென்றான்
ஆவ லாக விரைந்துமுன் னாலெனக்
காதர வாகிடவே.

# 23. பயமில்லை

●

என்மடி யில்கன மில்லை—எனவே
எள்ளள வும்பய மில்லை
பொன்முடி சூடிய மன்னன்—வந்த
போதிலுந் தானெனக் கென்ன?

சீரிய நேர்வழி தன்னில்—மிகச்
சிறந்த விதத்தினில் செல்வேன்
யாரெனை வந்து தடுப்போர்—என்ன
அவசியம் நேரிடக் கூடும்.

வழியிற் குழிகளென் றாலும்—மலை
வானுற வளர்ந்த தென் றாலும்
மழைபனி வெய்யிலென் றாலும்—பிறர்
மனது வருந்திட வேண்டாம்

இடையிடை ஏற்படு மின்னல்—கண்டு
இடைந்து திரும்பிட லாமோ
மடமயில் போன்ற நம்மாதர்—என்னை
மனிதனிவ னென் றேசாரோ?

எவ்விடம் செல்வதற் கெண்ணி—மனம்
இசைந்து நடந்துவந் தேனே
அவ்விடம் சேர்வதற் கான—உறுதி
ஆண்டவன் சால அளித்தான்

காலையும் மாலையும் பாடும்—பறவைக்
கானம் களைப்பைத் தடுக்கும்
பாலெனக் காயும் நிலவு—வயிற்றுப்
பசியை முழுதும் அடக்கும்

வானம் இடிந்திடு மேனும்—இந்த
வையம் வெடித்திடு மேனும்
மானிமுன் வைத்ததன் காலைப்—பின்னால்
மறந்தும் எடுத்துவை யானே!

# 24. காலுந் தேய்ந்ததே!

வாழும்வழி யேதும்அறி யாத அன்னையும்—பெற்றுள்
வார்த்ததொரு தங்கச்சிலை போல என்னையும்
பாழும் எந்தன் ஊழ்வினையி னுலிம் மண்ணிலே-அந்தோ
பாவிபடும் பாடுகளைக் கூற எண்ணிலே
ஏழையெனில் கேழுங்கிளை யில்லை யல்லவோ—ஆனால்
ஏனெனக்கேட் பார்களின்றி யின்னல் கொல்லவோ?
கூழுமின்றிக் குட்டிவற்றிக் குண்டி காய்ந்தது—இந்தக்
குவலயத்தில் வேலைத்தேடிக் காலுந் தேய்ந்ததே!

உருவினிற் சின்னஞ்சிறிய தாகப் பிறந்து—இந்த
உலகினிற கவலையென்ப தின்றிப் பறந்து
தருவுகளின் மீதமர்ந்து தத்தியே ஆடிப்—பாடி
தம்பதிகள் தங்கள்மன மொத்ததுங் கூடும .
குருவிகளே உங்களைப்போல் கூடொன்று கட்டி-அதில்
குஞ்சுடனே கொஞ்சிடும்நல் வாழ்வது கிட்டத்
தெருவுகளில் வேலைவேலை வேலையென்றுமே—தினம்
தேடித் திரிந்தலைந்தென் காலுந் தேய்ந்ததே!

# 25. கூண்டுக் கிளி

இச்சைக் கிசைந்தவிதம்—பறந்து
இனிய கனிசுவைத்து
பச்சை மரக்கிளையில—இசை
பாடிக் களித்திருப்பேன்.

அல்லி மலர்தனிலே — தேனை
அருந்தும் மதுகரமென்
கொல்லைப் புறந்தனிலே—தரிசனம்
கோரித் தவம்கிடக்கும்

நாக்கினில் தேன்தடவி—இசை
நன்கு பயிற்றுமென
காக்கை இளம்மகவு—சிறகைக்
கட்டியே காத்திருக்கும்

காவில் உலாவிவரும்—எழில்
கருங்குயில் சிறுபெடைதன்
சேவல் தவறுகளை—எடுத்துச்
செப்பத் துடித்திருக்கும்

மனித அமைப்பினிலே—தெய்வம்
மலிந்து கிடக்கையிலே
மனிதன் அதைமறந்து—என்னை
மயக்கிச் சிறைபிடித்தான்

என்னெழில் மேனியைப்போல்—தனக்
கில்லையென் றேங்கியழும்
சின்னஞ் சிறியசிட்டு—இன்று
சிரிக்கத் தொடங்குதந்தோ !

இரவும் பகலெனவே—மாறி
இன்று நேற்றாய்த்தினங்கள்
வருவது போவதுமாய்—எனது
வாழ்நாள் கழிகிறதே !

# 26. அறிக்கை

அழகுகனிந் தொழுகுகிற நொய்ய லாற்றின்
அருகினிலே சந்தோஷ புரமென் றோரூர்
வழிமீது தென்புறத்தில் பெருமாள் கோவில்
வாசலுக்கு வலப்புறத்தில் வானளாவும்,
நிழல்தருநல் லரசமரம் மரத்தைச் சுற்றி
நேர்த்தியாய் என்றென்றும் நிலைத்தி ருக்கும்
பழங்காலப் பெரியோர்கள் கட்டி வைத்த
பளிங்குபோன் றொளிருமொரு மேடை யுண்டு

சனிக்கிழமை முன்னிரவில் வழக்கம் போலச்
சனங்களெலாம் திரள்திரளாய் வந்து சேர்வார்
பனியெனினும் மழையெனினும் கோவிலுக்குள்
பசனைமட்டும் தவறாமல் நடக்கும் பக்தி
நனிமிகுந்த ஒருசிலர்கள் மெய் மறந்து
நடுச்சாம மாகும்வரை யாடிப் பாடி
இனிமைமிகு பழந்தேங்காய் சுண்டல் வைத்து
இன்பமாய்ப் பூசைதனை முடிக்கும் போது,

செந்தமிழ்நூற் கடலிடையே மூழ்கி மூழ்கிச்
சிந்தைமிகத் தெளிவடைந்த புலவன் வீட்டில்
இந்தவுல கந்தனிலே இதுபோல் வேறொன்
றிருந்ததிலை யென்றென்று மெனவி யக்க
முந்திபல நாளிருந்து தப்பி வந்து
மூதறிஞர் போன்றினிய மொழிகள் பேசும்
அந்தமிலாப் பேரழகு பெற்ற நல்ல
அருங்கிளி யொன்றரச மரந்தனி லிருந்தே

ஆர்பெற்ற குழந்தைகளோ மேடை மீது
அன்னந்தண் ணீரின்றி அந்தோ அந்தோ
போர்வையொரு கையகல மில்லா தின்று
பொறுக்காத துன்பத்தால புலம்பா நிற்கப்
பார்ப்பதற்கு வேடிக்கை யாக அங்கே
பழம்தேங்கா யெல்லாமும் வைத்துப் பண்ணும்
ஆர்ப்பாட்டம் சகிக்கவே கூட வில்லை
ஆண்டவனே என்றறிக்கை யிடத் தப்பாதே.

# 27. நான்

●

எல்லாமும் வல்ல இறைவனே—உல
கெங்கும் நிறைந்தவ னே
நலலோர்கள் தமமி லொருவனாய்—உன்னை
நாளும் வணங் கிடுவேன்.

இதயக் கடலி லிருந்திடும்—முதலை
என்ற பேராசையினால்
பதறப் பலபல உயிர்களைச்—சும்மா
பற்றி விழுங்கிடும் நான்,

இன்புறு வோர்களுக் கின்னலைத்—தினம்
இயன்ற அளவியற்றித்
துன்புறு வோர்களைத் தூவெனத்—துப்பித்
தூரம் துறந்திடும் நான்,

பொதுநலம் பொதுநலம் என்றுதான்—பலரும்
புகழப் புகன்று விட்டு
பொதுநல மென்ப தனைத்தையும்—சுயமாய்ப்
பொருந்தவே துய்த்திடும் நான்,

ஒண்டச் சிறுநிழ லின்றியும்—பசிக்
குண்ண உணவின்றியும்
அண்டை யயலிற் சகோதரர்—அலற
ஆவலாய்ப் பார்த்திடும் நான்,

பலவித மானவென் பாவங்கள்—பிறர்
பார்க்கக் கூட ாதபடி
செல்வத் திரைமறை வாக்கியே—பூசை '
செய்யப் புகுந்திடும் நான்,

சக்தி படைத்த மொழிகளால்—மக்கள்
தண்டனை யைத்தவிர்த்து
முக்தி யருளுக என்றுதான்—வந்து
மொழிந்துநின் முன்பிருந்தே!

# 28. அவன்

●

ஊரி லுள்ளவர் யாவரி லும் முதல்
உடையவ னாயிருந்தான்—அவன்
யாரையும் பகை மூட்டிப் பிரித்துத்தன்
அடிமைக ளாக்கிடுவான்.

பாவ மான செயல்களை நன்கு
பழகுவ தற்கெனவே—அவன்
ஆவ லாகத்தன் னாயு ளனைத்தையும்
அற்பணஞ் செய்துவிட்டான்.

பிறரு ழைப்பினில் காலங் கழிப்பதில்
பிரிய முடையவனென்—றவன்
சிறிய தொந்தியும் சென்னிற மேனியும்
செப்பிடும் மற்றவர்க்கே.

சிறிய மீன்களைத் தேடிப் பிடித்துத்
தின்னாமல் திருப்தியுடன்—தினம்
பெரிய மீன்கள் பிழைக்கும் படியயன்
பிறப்பிக்க வில்லை யென்பான்

புல்லுந் தவிடுமில் லாமல் பசுக்களைப்
புலன்களில் மேயவிட்டு—நாளும்
நல்ல பாலை நிறையக் கறப்பதும்
நம்திற மென்றுரைப் பான்

கல்வி நீதி கருணையொ டுண்மை
கடவுளைக் காட்டிலுந்தன்— திரண்ட
செல்வ மேமிக வன்மையுடையதாய்
சிந்தையி லெண்ணிடுவான்

காரி யங்கணக் கத்தனையும் மவன்
கருத்துப் படி நடத்தி—அந்த
ஊரி லுள்ளவர் யாவரி லும்முதல்
உடையவ னாயிருந்தான்.

# 29. எச்சரிக்கை

நீல முகிலினம் சால மொய்த்திடும்
நீண்ட மலைதனிலே—மிகவும்
நேர்த்தி யாயொரு பாறை நின்றது
நிலையில் லாநிலையில்
வேலைக் காரர்கள் கூலிக் காய்மரம்
வெட்ட வருகையிலே—உருண்டு
வீழ்ந்து கொன்றிடு மோவெ னும்படி
வெருள வைப்பதுவாய்

பணத்தி லானஅப் பாறை மீதொரு
பாவி வீற்றிருப்பான்—அவனும்
பார்வை தனைமிகக் கூர்மை யாக்கியே
பகர்வன பயங்கரமாய்
கணத்தி லிவ்வழி யாக வருபவர்
காசு தந்திடுவீர்—மலைக்குக்
காவ லாயிதன் மீதி ருக்கிறேன்
கடவு ளாணையினால்.

பாவம் ஏழைகள் தந்த காசொரு
பாறை யாய் வளர்ந்தும்—அந்தப்
பாவி மகன்தினம் ஈவி ரக்கமில்
லாது படுத்திடவே
ஏவ லாளிகள் தங்கள் நெஞ்சமும்
இறுகி வரலாச்சு—இவனை
இங்கி ருந்துதொ லைப்ப தென்றொரு
எண்ண மெழ லாச்சு

புத்தி மான்பல வானெ னும்மொழி
புந்தி யில்புகவே—ஒருநாள்
புகன்றனர் அட நீயு மெங்களைப்
போன்ற வன் எனவே
சத்தி யம்இனி மக்கள் யாவரும்
சமமெ னச்சொலவே—உழைத்துச்
சகத்தில் சுகித்திரு அன்றெனில் வரும்
சாவு முறை யெனவே.

# 30. முழக்கம்

●

உழைப்ப வர்க்கு மட்டு முலகம்
உரிமை யுள்ள தென்றுதான்
எழுப்பு கின்ற ஓசை விண்ணி
லிடிமு ழங்கு கின்று தான்

பிறந்த சொந்த நாட்டி லெவனும்
பிச்சை யேற்றுண் ணுமலே
இறந்து போகு மட்டு மினிதி
ருந்து வாழ எண்ணியே

காலை மாலை யாயு ழைப்போன்
கண்க லங்கி வாட வே
வேலை யற்ற வீணன் வயிறு
வெடிக்கத் தின்றிங் காடவே

தமக்கு வேண்டு மென்று செல்வர்
தாமு ரைக்கும் பொருளெல்லாம்
எமக்கும் வேண்டு மென்று ரைக்கும்
ஏழைமக்கள் திர ளெல்லாம்

சுயந லத்தை நாடிச் செல்வர்
சூது வாதை யுன்னியே
பயமு றுத்து வார்க ளென்னில்
பழிசு மப்ப ரென்னவே,

மற்று முண்மை யன்பு கடமை
மறந்து விட்ட மனிதனைப்
பெற்ற தந்தை யேனு மெதிர்த்துப்
பேச வேண்டு மினியென

சத்தி யம்நம் பாம லிந்தச்
சகத்தில் வாழு வோர்க்கெலாம்
மொத்த மாக துக்கம் வந்து
மூளும் நாளைப் பார்க்கலாம்.

# 31. கூடவரும் பொருள் இல்லை

●

அந்தப் பெரிய நகரிலே—ஒரு
அழகிய சோலை நடுவிலே
இந்த உலகில்வே றெங்கிலும்—இல்லை
என்னும் படியொரு மாளிகை.

தென்றல் இனிமை கலந்ததாய்—எழில்
தெய்வீக மானபொன் மாலையில்
அன்றங் கொருவன் இருந்தனன்—அயர்ந்
தழகிய பஞ்சணை மீதிலே.

செல்வம் நிறையத் திரட்டியே—அதைச்
சிந்தை குளிரச் செலவிடல்
நல்லுயி ரின்பய னெனவெ—வாழ்
நாளில் உறுதியாய் நம்பினன்.

சுருங்கித் தளர்ந்த அவன் முகம்—பல
சுகங்களில் மூழ்கிச் சலித்தபின்
நெருங்குந் துயரை நினைப்பதால்—வரும்
நெஞ்சப் பதைப்பினைக் காட்டுமே.

அன்றய மாலைக் கதிரவன்—தனது
அந்தியத் தறிகுறி யாமென
நின்று மறைந்தனன் மேற்கிலே—உடல்
நிலையற்ற தெனநினைப் பூட்டியே.

உள்ளம் பதைத்து; கண்களில்—முத்தாய்
உருண்ட திரண்டொரு நீர்த்துளி
பிள்ளையும் பெண்டுமற் றேனெனச்—சிறிது
பேசவும் செய்தனன் ஏக்கமாய்.

பொன்னுடன் பூமி பொருளெல்லாம்—இங்கு
போதும் அளவு திரட்டினேன்
என்னுடன் கூடவரும்பொருள்—ஒன்றும்
இல்லை இவைகளி லென்னவே.

# 32. பிரிவு

●

இதயந் தன்னி லொருதுளி யேனு
மிரக்கமில் லாதவனாய்—என்றும்
இனிமை கலந்தொரு வார்த்தையுங் கூட
இயம்பறி யாதவனாய்
உதய மாகும் பரிதியைக் கண்டஞ்சி
ஒழியும் இருளெனவே—நல்ல
உண்மை யைக்கண் டொழிந்திவ் வுலகில்
உலோபியு மாயிருந்தேன்

பணத்தைப் பெரிதென எண்ணிநான் பண்ணின
பாவம் பலபல வாம்—அதைப்
பன்னிச் சொல்லவும் கூசுதே யென்மனம்
பார்த்தவர் சீயெனவே
பிணத்தைத் தேடித் திரியும் நரியெனப்
பெரிதும் திரிந்தலைந்தேன்—என்னைப்
பெற்ற தாயிக்கும் வஞ்சனை யாகவே
பிழைகள் பல புரிந்தேன்

இந்த மானில மீதினி லென்னதென்
றிருக்கும் பொருளனைத்தும்—இனி
எவனுக்குச் சொந்த மாகிற தோஅதை
எள்ளள வும்அறியேன்
பந்த பாசங்கள் யாவும் பெரும்புலி
பாய்ந்த புதரிடையே—எதிர்
பட்ட சிறிய சிலந்தி வலையெனப்
பட்டென் றறுபடுதே.

கொய்த கொழுந்தென வாடி யுலர்ந்து
குலைந்தது என்னுடலும்—ஒரு
கூகை யருகினில் வந்தினி வாவெனக்
கூவி யழைக்கிறது
செய்த செயல்களில் செல்லும் வழித்துணை
சிறிதும் இல்லாததினால்—அந்தோ
செய்வ தென்னினி யென்னவ ருந்தியென்
சீவன் பிரிகிறதே.

# 33. அறியாமை

●

சின்னஞ் சிறியவ ஞக இருந்தனன் நானுமே—நாளும்
சிரித்த முகத்துடனே
என்னை மிகவும் அருமையாய்ப் பேணி வளர்த்தனர்—வீட்டில்
இருந்தவர் யாவருமே.

வீட்டி லிருந்தவர் யாவரி லும்மெத்தப் பெரியவர்—சகல
விபரமு மறிந்தவ ரென்
பாட்டனு ரென்பதை வீட்டி லிருக்கின்ற பூனையும்—நாயும்
பசுவுங்கன் றும் அறியும்.

பருத்துச் சரிந்த வயிறும் வழுக்கைத்தலையுமாய்க்—கண்கள்
பார்க்கப் பயங்கரமாய்
நரைத்த புருவம் முருக்கிய மீசையு மாகவே—சிவந்து
நன்கு வளர்ந்திருப்பார்

ஆசை முழுவதும் காசுமேல் வைத்தவராயினும்—என்மேல்
ஆருயிர் வைத்திருந்தார்
காசுக் கதைகளைப் பேசவும் கேட்கவும் அப்பனே—வாடா
கண்மணி யென்றழைப்பார்

இரவைப் பகலெனச சொல்லி யுலகில் மெய்ப்பிக்கலாம்—நல்ல
இனிப்பைக் கசப்பெனலாம்
பொருளினு லாகாத காரியம் யாதொன்று மில்லைகாண்-இந்தப்
பூதல மீதெனவே

பணமுள்ள வன்பல வானெனச்சொல்லும் பழமொழி.நெஞ்சில்
பதிய உரைத்திடுவார்
குணமாக வேயிதைக்கொள்ளெனப் பின்னையும்கூறுவார-கூறிக்
கோளிது தானெனவே

○●○

எல்லாமும் வல்ல இறைவனியங்குதல் போலவே-என்றன்
இதயம் முழுவதுமே
பொல்லாத ஆசை புகுத்தி வளர்க்கத் தொடங்கிய-அந்தப்
போக்கினி லேயொருநாள்

படுத்த படுக்கையில் பந்துசனங்க ளனைவரும்-சூழ்ந்து
பாட்டனைப் பார்த்தழவே
கொடுத்தது வாங்கின தவ்வளவும் சொல்லிக்கொண்டுதான்
குற்றுயி ராய்க்கிடந்தார் (-பாட்டன்

நீட்டிய கைகளும் கால்களு மான நிலையிலே-பாட்டன்
நினைவு மறக்கையிலே
பாட்டனே சாவைப் பணத்தைக் கொடுத்துத்தவிர்த்
பரபரப் பாய்ப் பரிந்தே! (திடேன்-என்றேன்

# 34. காந்தி தரிசனம்

○

காந்தி மகானின் தரிசனம்—இன்று
காணக் கிடைத்ததம்மா!
மாந்தளிர் போலெழில் மேனியார்—கதிர்
மலரொளிப் புன்னகையார்

தாமரை யொப்பக் குவித்திடும்—கரம்
தண்ணரு ளாகியகண்
பூமிசை மாந்தர் புகழ்ந்திடும்—தூய்மை
பொலியும் கதருடையார்.

பாலமு தாகிய நூல்களில்—சுவைப்
பண்புப் பொருள்திரட்டி
ஞாலத் துயிர் பசியாறவே—உண்ண
நல்கிய நம்பெருமான்.

சாந்த மெனுந்திருச் சாலையில்—சன
சக்தி மணி பரப்பி
பாந்த மெனுமன் பிறுக்கவே—வாழ்வுப்
பயணத்தைப் பண்ணவைத்தார்

பாவப் படுகுழி தன்னிலே—வீழ்ந்து
பரிதவிக் காதிருக்க
தேவ அகிம்சைத் துடுப்புடன்—சத்தியத்
தெப்பம் தெரிந்தளித்தார்

அச்சப் பெரும்பிணி நீக்கியே—பகை
ஆட்சித் தளையறுத்து
மெச்சுஞ் சுதந்தர அன்னையைச்—சிறை
மீட்ட பரமபிதா!

புகழ்பவர் போற்றிப் புகழுவீர்—ஒரு
புண்ணிய மூர்த்தியென்
மகிழ்பவர் வாழ்த்தி மகிழுவீர்—ஜெய்
மகாத்மா காந்திக்கென.

# 35. மனிதனாய் வாழ்க!

அன்பு மிக்க ஆருயிர்ச்ச கோதரா—இன்பம்
அனைத்து முன்னைத் தேடி யோடி வருதடா!
உன்பொ றுப்பு நீயு ணர்ந்திவ் வுலகிலே—நாளும்
உழைத்து வாழ வேண்டு மென்று கருதடா!

கதிர்க்க ரத்தி னால்நெ ருப்பு போலவே—பரிதி
காய்ந்தெ ரிக்க வேநி லத்த போதிலும்
நதிக்க ரைக்கண் நின்ற நாவல் மரநிழல்—வாழும்
நண்டு தவளை மண்டை காய்வ தில்லையே.

அலைய டித்துக் குலைந டுக்கும் கடலிலே—நல்ல
அறிவுத் திறமை யோட மைத்த படகிலே
தொலைவி டத்தை யுங்க டந்து செல்வது—மிகவும்
சுலப சாத்ய மென்று சொல்ல வேண்டுமோ

மலையெ னக்கு வித்த பஞ்சு தன்னிலே—குன்றி
மணிநெ ருப்பு பட்ட மாத்தி ரத்திலே
இலையெனப்பு கன்ற வார்த்தை யின்னமும்-உன்றன்
இதய மேன றிந்து கொள்ள வில்லையோ,

கால்ச றுக்க வான ளாவி நின்றதோர்—பெரிய
கருங்கற் பாறை யாயி ருந்த போதிலும்
நூல்சி றுத்த நுனிப டைத்த உளியினால்—சுக்கல்
நூறு கோடி யாவ துண்மை யல்லவோ ?

இந்தி ராதி தேவ ரான போதிலும்—பிறர்க்
கின்ன லுண்டு பண்ணிவாழ வல்லரோ?
அந்த கார மேநி றைந்த போதிலும்—சிறிய
அகல்வி ளக்கு மட்டும் போது மல்லவோ?

இறுதி சிவ னுக்கு நேரு மென்னினும்—ஒரு
இம்மி யும்ம னங்க லங்கி டாமலே
உறுதி மிக்க உண்மை வாய்ந்த மனிதனாய்—வாழ்க
உலக மெங்குந் தெய்வ மென்று ரைக்கவே!

# 36. ஏமாற்றம்

●

அந்த நல்ல நாளுக் காகவே—கலைஞன்
ஆண்ட னேகம் காத்தி ருந்தனன்
சொந்தத் தாயின் வீடு சென்றதன்—காதல்
துணைவி வரவைப் பார்க்கும் ஒருவனாய்.

காத்த நாளும் வந்து சேர்ந்தது—கலைஞன்
கவலை யற்றுக் களிக்க நேர்ந்தது
பூத்த கொம்பு போன்று தன்மனை—அழகு
பொலிய நன்கு புதுக்கி யாச்சுது.

நீல வானில் மின்னல் போலவே—அருகில்
நின்ற அன்பு மனைவி யோடுதான்
மாலை மஞ்சள் குங்கு மத்துடன்—தனது
மனைமுன் வந்து மகிழ்ந்தி ருந்தனன்

மங்கும் அந்த மாலை வேளையில்—இனிய
மலர்ம ணங்க மழ்ந்த காற்றினில்
தங்கள் மேனி புளகம் போர்க்கவே—தவத்
தாயின் வரவைப் பார்க்கு சேய்களாய்

நாளும் போது மாக வானவர்—சுடர்
நல்வி ளக்கு பலவு மேந்தவே
ஆளும் அவர்கள் தெய்வம் வந்தது—தம்மை
ஆசி கூறி அவலம் தீர்க்கவே.

அடியெ டுத்து வைக்கும் இடமெல்லாம்—மலர்கள்
அள்ளி அள்ளி வீசத் தமனியக்
கொடிய சைந்த தென்னத் தெய்வமும்—கலைஞன்
குடிலைத் தேடிக் கொண்டு வந்தது.

இந்த ஊரி லின்னவன் குடில்—இருக்கும்
இடமெ தென்று தெய்வம் வினவவும்
தந்தி ரத்தில் காசு சேர்த்தவன்—தோன்றித்
தனது வீட்டுத் தடத்தைக் காட்டினான்

சிலையைப் போலத் திகைத்தி ருந்தனன்—இனிச்
செய்வ தென்ன வென்று கலைஞனும்
கலைஞன் வாழ்க! என்ற கூக்குரல்—அங்கு
காது செவிடு படவொ லித்ததே.

# 37. வேட்கை

○

உயிருக் குயிரான உத்தம நண்பர்கள் யாவரும்—அறிவில்
உயர்ந்தவன் நீயெனவே
பெயரும் பொருளுமுன் வாசலைத் தேடி வருமொரு—பதவி
பெறமுய லென்றுரைப்பார்
துயரமில் லாத நற் றூயவா னத்தெழில் மீன்களே—உங்கள்
தோழமை பெற்றிடும் நற்
செயல்களை நாடியென் சிந்தனை வேகமாய்ச் செல்லுது—என்ன
செய்குவன் நானிதற்கே.

கூடப் பிறந்தச கோதரர் யாவரும் கூடியே—மாட
கூடங் களை யமைத்து
ஆடலும் பாடலு மாக இருந்து வாழ்வோமெனச்—சொல்வர்
அன்புடன் ஆதரவாய்
தேடக் கிடையாத தேசு படைத்தவிண் மீன்களே—எனக்குச்
சிறிதும் விருப்ப மில்லை
நாடுது நீங்களிருக்கு மிடந்தனை யென்மனம்—இந்த
ஞாலந் தனைவெறுத்தே.

பெற்று வளர்த்தயென் தந்தையும் விரும்புவர்—பொருள்
பேணிப் பெருகிடவே
குற்றங் குறையுமில் லாதவ னுகநூ றாண்டுகள்—வாழ்ந்து
குவலயத் தின்பமுற
முற்றிலும் பொன்னுடல் பெற்றொளிர் கின்ற விண்மீன்களே-
மூளவில் லையிதிலும் (விருப்பம்
சுற்றமாய்க் கொண்டும் மில் யானும் ஒருவனாய் வாழ்தலே—
சுகமென எண்ணுகிறேன். (பெருஞ்

வாழ்விலும் தாழ்விலும் உனைப் பிரியலன் என்னவே—வந்த
வாழ்க்கைத் துணைவியவள்
ஏழ்கடல் வைப்பினுள் உள்ள சுகங்க ளனைத்தையும்—உமக்
கீகுவ னென்றுரைத்தே
தாழ்வறு மேனிலை தங்கிச் சுடரும் விண்மீன்களே—காமத்
தழலிடை தள்ளுகிறாள்
ஊழ்வினைகூட்ட மறுக்கினும் நீவி ருதவுவீர்—உம்மில்
ஒருவன்னா ஞவதற்கே!

# 38. பிரம தரிசனம்

●

வாசித்துக் கொண்டிருந்தேன் ஒருநாள் மாலை
வருவீரா போய்வருவோ மென்றான் நண்பன்
யோசித்துப் பார்ப்பதற்கும் தோண வில்லை
ஊஹூம்நான் வரவில்லை யென்றால் எங்கள்
நேசத்துக் கழகாகா தெனவே நானும்
நினைவுமறந் தவன்பின்னா லெழுந்து சென்றேன்
தேசத்தைக் கடந்துசற்று நேரத் துக்குள்
தேவருல கந்தாண்டிச் சென்றோம் மேலும்

எப்போதோ எனதாசை நண்ப னோடு
எனைப்படைத்த அயனிடம்போய் வருவோ மென்ற
தப்போதென் நினைவுக்கு வந்த தால்சற்
றானந்தம் தோய்ந்தமனத் துடனே நண்பா
இப்போது தானறிந்தேன் நினது எண்ணம்
என்றென்றும் இந்நன்றி மறவேன் ஆனால்
அப்போதில் அமர்ந்தவன் நம் முடனே பேச
அவகாச மளிப்பானா? என்று கேட்டேன்

முன்கூட்டிச் சொல்லியுளேன் சும்மா யிங்கு
முணுமுணுக்க வேண்டாங்காண்' என்றான் நண்பன்
நன்காட்டின் அமைதியைப்போ லிருந்த தால்நான்
நடுநடுங்கா திருப்பதற்கும் முயன்றேன் ஆனால்
என்கூட்டை விட்டுயிர்தான் போவ தேபோல்
இருந்ததொரு கணநேரம் நீளப் பார்த்தேன்
முன்கேட்டில் காவலின்றி யார்வந் தாலும்
வருகவெனும் முத்தெழுத்தைக் கண்டின் புற்றேன்

அழகியநன் மலர்மீது வீற்றி ருக்கும்
ஆண்டவனெம் மிருவரையும் அணைத்துக் கொண்டு
குழந்தைகளின் குசலத்தை வினவி னேனுயக்
குந்துவதற் காசனமுந் தந்த தோடு
பழம்பாலும் கொண்டுவரப் பணித்தார், வேண்டாம்
பலகாரம் சாப்பிட்டோம் வரும்போது உங்கள்
தொழிற் சாலை பார்க்கணு மென் றென்னைப் பன்னாள்
தொந்திரவிக் கவிஞன்செய வந்தோ மென்றான்

ஓரினமும் ஒருகுலமு மாயுள் ளோம்நாம்
உங்களுக்கென் னனுமதியும் வேண்டு மோவென்
றீரண்டு முகங்களிலும் மலர்ச்சி தோன்ற
எழுந்துநடந் தார்முன்னால் எங்க ளோடு
பாரினிலே முன்போலச் சிருஷ்டி பண்ணப்
பழங்கிழவ னாகிவிட்டேன் சாத்திய மில்லை
பேருக்கா யிருப்பதன்றி வேலை யெல்லாம்
பிள்ளையின்மேற் பார்வையில்தான் நடக்கு தென்றார்

பட்டென்று விளங்கிற்று இன்று பாரில்
பாவிகளின் தொகைபெருகும் கார ணந்தான்
கட்டுக்குள் அடங்காமல கோபம் வந்தால்
கதையினைப்பின் கேட்கணுமோ? ஐயா, பாரும்!
சட்டென்று இன்றுமது பதவி தன்னைத்
தள்ளுபடி செய்திடுவீர் இல்லை யானால்
மட்டரக மனிதர்களே மலிந்து போவார்
மண்ணுலகந் தாங்காது இனிமே லென்றேன்

பிரமனுக்கோ முகந்தனில்ஈ யாட வில்லை
பேசுவது யாதெனவும் புரிய வில்லை
சிரங்குனிந்த படியிருந்து எதையோ நெஞ்சில்
சிந்திக்கத் தொடங்கிவிட்டார் அப்போ தங்கே
பரமாணுச் சக்திகுண்டு வெடிப்ப தேபோல்
படீரென்ற சத்தத்தால் துள்ளி விழுந்தேன்
பிரமனையும் நண்பனையும் காண வில்லை
பிள்ளை மட்டும் பட்டாசு சுடக்கண் டேனே!

# 39. தமிழ்

○

மெய்ப்பொரு ளாகிய கன்னித் தமிழணங்கே—என்றன்
மேன்மைக் குறுதுணையே
செய்ப்புனல் நெற்பயி ரென்ன உயர்த்திடுவாய்—உன்னைச்
சேர்ந்தவர் யாவரையும்
பொய்ப்பொருள் தன்னைப் பொருளென எண்ணினதால்
போற்ற மறந்திருந்தேன் (—அன்று
கைப்பொருள் தன்னிலும் மெய்ப்பொருள் நீயெனவே—
கற்றுக் களிப்படைவேன். (இன்று

நீல வானத்தில் உலவும் நிறைமதிபோல்—எனது
நெஞ்சில் உலவிடுவாய்
ஆல மரத்தின் விழுதுக ளாமெனவே—எனக்
காதர வாயிடுவாய்
பாலுடன் தேனைப் பருகும் இனிமையிலும்—கோடி
பங்கதி கம்இனிப்பாய்
கால மலர்களைத் தூவி இறைஞ்சுவதே—எனது
கடமை யெனவுணர்ந்தேன்,

வாழ்விருள் சூழ்ந்திடும் பாதையில் நீயிருந்தாய்—ஒளிர்
வண்ணத் திருவிளக்காய்
பாழ்படு மெனுடலாகிய வீணையிலே—இன்று
பண்க ளிசைத்திடுவாய்
ஊழ்வினை கூட்டிட உன்னை யடைந்தனன்காண்—என்றன்
ஊனுயி ரேவுணர்வே
தாழ்வுறு மேனிலை தந்த தமிழணங்கே—கவிஞர்
தங்கள் தவப்பயனே!

இளமை முதுமை யிரண்டிலும் செந்தமிழே—எனக்
கின்பம் பெருக்கிடுவாய்
குளுமை மிகுந்திள நீருடன் மோரெனவே—துன்பக்
கோடையில் குளிர்ந்திடுவாய்
களமென என்னகந் தன்னிற குவித்திடவே—கதிர்க்
கவிதைக ளாயிடுவாய்
வளமை யறிந்து வளங்கும் கலையுணர்வாய்—வாழ்க
வையக மின்புறவே!

# 40. மங்கையின் மகிழ்ச்சி

ஆற்றுக்குச் சென்றினிய நீரி லாடி
ஆவலாய் வந்துகுட மிறக்கி வைத்துச்
சாற்றுமண மலர்பறித்துக் கொண்டு வந்து
சந்திரனைப் போலுமெழில் செண்டாய்க் கட்டி
கூற்றுவனே யெனும்படியாய் அஞ்ச னத்தைக்
குழைத்தழகாய் விழிக் கிட்டுத் திலகம் வைத்துப்
போற்றுகிற புத்தாடை யுடுத்திப் பெண்மை
பொலியமனம் பூரித்துப் பொங்கா நின்றாள்

முன்றிலைநன் றாய்ப்பெருக்கிக் குளிர்ந்த நீரை
முத்தெனவே யள்ளியள்ளித் தெளித்துவிட்டு
நன்றெனப்பொன் கிண்ணத்தைத் திறந்து கோலம்
நவநவமாய்ப் போட்டதன்பின் நறிய வான
அன்றலர்ந்த மலர்மணத்தை யளைந்து கொண்டே
ஆனந்த ரீட்ட அசைந்தசைந்து வந்த
தென்றல்தனைக் கண்டுலகை மறந்தா ளின்பம்
தேகமெல்லாம் பரவிடவே திகைத்தா ளாகி,

தாமரைதன் னிதழ்க்கதவை மூடக் கண்ட
தண்குமுதம் கண்மலர்ந்து தகைமை கூறக்
காமலரில் மதுவைநனி யுண்ட வண்டு
கண்மயங்கி வழிநெருடும் காட்சி தன்னை
மாமரச்சோ லைக்குயிலார் மனமுக சிந்து
மணம்புரிந்த தன்பெடைக்கு மகிழ்ச்சி யூட்டக்
கோமளநல் லிசையமுதாய் வடிக்கக் கேட்டுக்
குளுகுளெனத் தன்னெஞ்சுங் குளிர லானாள்

மெத்தமெத்தச் சலித்தவன்போல் கதிரோன் தானும்
மேற்றிசையில் போய்மறைய லானான், வானில்
தத்தமிருப் பிடம்தேடிப் பறவை யெல்லாம்
தம்மினத்தோ டழகாகப் பறக்கக் கண்டு
கத்துகின்ற கன்றுகளை நினைத்துக் கொண்டே
கறவையெல்லாம் விரைந்து வரும் காம ரந்தி
குத்துவிளக் கேற்றியபின் தனது காதல்
கொழுநன்வரின் அவள் மகிழ்ச்சி கூறப் போமோ!

# 41. இனிமே லேனும் வேண்டாம்!

●

மிகமிகநன் ருயிங்கு வாழ்க வென்றே
மேலான முறையில் நமைப் படைத்தி ருந்தும்
சுகமெனப ஓதெள்ளளவும் அறியோ மாகிச்
சோற்றுக்குத் தாளங்கள் கொட்டா நின்றோம்
பகைமையெனும் ஒருகுணந்தான் நம்மை யிந்தப்
படுநாசம் செய்ததெனை அறிவாய் தம்பி
அகஞ்சுருங்கி முகங்கோணும் அடிமை வாழ்க்கை
யாருக்கும் வேண்டாங்காண் இனிமே லேனும்

நல்லவழி தனைத்தேடிச் செல்லு வோர்க்கு
நலைதுவே நேர்வதலால் ஒருங்கா லேனும்
அல்லவைகள் நேர்வதிலே என்னும் சொல்லை
அறியாது வீணும்நொந் தழியா நின்றோம்
கல்லாத ஒருகுறைதான் நம்மை யின்று
கண்கலங்கச் செய்வதெனை அறிவாய் தம்பி
தொல்லையிலே போய்மாட்டிக் கொண்டு வீணாய்த்
துன்புறுதல் வேண்டாங்காண் இனிமே லேனும்

மடங்கொன்று வீரத்தை யூட்டிச் சொந்த
மாதரையில் வாழ்க்கைக்குத் துணையாய்க் கொண்டு
அடங்காதும் அடக்காதும் பிறரை நேசித்
தானந்தம் காணுதே அலையா நின்றோம்
திடங்குறைந்த காரணந்தான் நம்மை இன்று
திண்டாடச் செய்வதெனை அறிவாய் தம்பி
நடுங்கியநெஞ் சுடையவொரு பேடி வாழ்க்கை
நானிலத்தில் வேண்டாங்காண் இனிமே லேனும்

புவிமீதி லுள்ளதனைச் சமமாய்ப் பங்கிப்
புசிக்கின்ற நற்பழக்கம் படியா திங்கே
அவனைவிட எனக்கதிகம் வேண்டுமென்று
ஆகடியம் செய்துமிக நோகா நின்றோம்
அவனுக்கும் உனக்குள்ள உரிமை யுண்டு
அபிலாசை அனைவர்க்கும் ஒன்றே தம்பி
எவனையுமே இழிவாக எண்ணிக் கொண்டு
இயல்பழிய வேண்டாங்காண் இனிமே லேனும்

# 42. சுதந்திர தினம்

கொக்கரக் கோவென்று கூவுது கோழி
கும்கும் கும் மென்று குமுறுது பேரி
செக்கச் செவேலென்று சிவந்தது வானம்
சீக்கிர மாக எழுந்திரு பாப்பா!
சீக்கிர மாக எழுந்திரு பாப்பா!
சீமை விடுதலை நாளின்று பாப்பா!!

காகா காவென்று கரையுது காகம்
காமரு பூவினம் பூத்தத னேகம்
பாகாரு மின்னிசை கேட்குது தேகம்
பட்டென் றுதறி யெழுந்திரு பாப்பா!
பட்டென் றுதறி யெழுந்திரு பாப்பா!
பாரின் விடுதலை நாளின்று பாப்பா!!

ஆலயந் தோறும் மணிகளின் நாதம்
ஆறு குளங்களில் மந்திர கீதம்
காலைப் பொழுது புலர்ந்தது போதும்
கண்ணைத் துடைத்து விழித்தெழு பாப்பா!
கண்ணைத் துடைத்து விழித்தெழு பாப்பா!
காந்தி மகானைக் கைதொழு பாப்பா!!

மேகப் படலங்கள் யாவையும் வாட்டி
மெத்தெனும் தண்ணொளி யாங்கரம் நீட்டி
வேகத் துடன் எழும் பரிதியுன் போட்டி
விரைந்து நிமிர்ந்து விழித்தெழு பாப்பா!
விரைந்து நிமிர்ந்து விழித்தெழு பாப்பா!
வீரச் சுதந்திர நாளின்று பாப்பா!!

# 43. உபதேசம்

●

சகல சௌகரி யங்களும்—உடைய
சட லமுண்டாக்கி
அகில மீதுபோய் வாவெனத் தெய்வம்
அனுப்பி வைத்ததுகாண்

வேனி லில்இளஞ் சூரியன்—உதிக்கும்
வேளை யிருப்பது போல்
ஆன தூயநல் லொளியையும்—அமைத்து
ஆசியுங் கூர்ந்தே.

தூய நீரினி லாட்டியே—புதிய
துணிக ளணிவித்து
தாய னுப்பிய சேயென—உயர்ந்த
தகைமை கைதரவே

அருமை யானயென் சீவனே—உலகில்
யாது நேர்ந்திடினும்
பெருமை குன்றிடும் காரியம்—எதையும்
பேண வொண்ணாது

புத்தி போகுமப் போக்கிலே—மயங்கிப்
புலன்கள் வசமாகி
சத்தி யத்தை மறந்திடின்—மனித
சன்மம் வீணாச்சு

புனிதத் தன்மை யிழந்தபின்—இந்தப்
பூமி யின் மீது
மனித னென்றுயிர் வாழ்வதை—விடவும்
மரண மினிதாகும்

பழுதி லாதுபோய் வாவெனச்—சொன்ன
பரமன் முன்னிலையில்
புழுதி பூசிய மேனியைக்—கொண்டு
போக முடியாது.

# 44. வாழ்க நேரு

கலியு கத்து வரத னென்னக்
கடவுள் தந்த நேருஜி!
காலம் முழுதும் தேச நலனைக்
கருதிப் பேணும் நேருஜி!

இலங்கும் முகில்க ளொன்று திரண்டு
இறங்கும் பருவ மாரிபோல்
இயங்கும் கலைகள் முயன்று கற்று
இசைவி ளங்கும் நேருஜி!

கொலைபொய் சூது களவி லாது
குவல யங்க ளிக்கவே
குலவு கடலெ னப்ப ரந்த
கொள்கை கொண்ட நேருஜி

தலைக ளக்கப் பேசிப் பேசித்
தம்மைத் தாமே மாற்றுவார்
தலைவ ராகக் காணும் கனவைத்
தகர்த் தெறிந்த நேருஜி!

அலகில் மாந்த ரனைவ ருந்தன்
அருமை மக்க ளாகவே
அன்பு காட்டி அரவ ணைக்கும்
அறிஞர் நமது நேருஜி!

உலகம் போற்றும் மனிதராகி
ஒவ்வொ ருவரும் மகிழவே
உயர்ந்த மேரு கிரியைப் போல
உறுதி காட்டும் நேருஜி!

மலைக லங்க நேர்ந்த போதும்
மனங்க லங்கி டாதநம்
மாண்பு மிக்க தலைவர் நேரு -
மகிழ்ந்து வாழ்க! வாழ்கவே!!

# இனிய கவி வண்டு

ஆசிரியர்—வெள்ளியங்காட்டான்;
56 பக்கங்கள், விலை ரூபாய் 1—0—0
கிடைக்குமிடம்:—சந்தே கவுண்டன் பாளையம்
ஆலாந்துறை P. O. கோவை.

---

# தினமணியின் மதிப்புரை

---

எளிய கவிதையில உயர்ந்த தத்துவங்களையும், பண்பையும் அழகாக வார்த்துப் பாமரரும் அறிஞரும் ரசிக்கும் வண்ணம் வெள்ளியங்காட்டன் எழுதிய அழகான கவிதைகள் கொண்ட தொகுப்பு இது. இயற்கை, வாழ்க்கை, நல்ல லட்சியங்கள்பற்றி வெள்ளியங்காட்டானின் உள்ளத் தொளிகள் படிப்போரின் மனதைக் கவ்விச் சிந்தனைச் சக்கரத்தை சுழலச் செய்கிறது. யோக வாசிஷ்டம் முதல் உபநிஷத் கீதையெல்லாம் போதிக்கும் உண்மைகளின் சாரத்தைஇரண்டொரு வரிகளில் அனுயாசமாகத் தருவது இவரது கவிதையில் உள்ள ஒரு விசேஷ அம்சம்.

மற்றவர் சுகங்களிலே—உனது
மனம் மகிழ்ந் திடப் பழகு
மற்றவர் துயர் தனிலே—உனது
மனங் கனிந்திட ஒழுகு.

இதை ஒன்றைமட்டும் மந்திரமாகத் தமிழர் பின் பற்றினலே போதும். மகா உன்னத நிலையை எய்தி விடலாம்.

**தினமணி 8—10—1948.**